**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 130** **நாள்: 05.03.2026**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், இன்று அடையாறு மண்டலத்திற்குட்பட்ட மடுவின்கரையில் ரூ.71.12 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் 15 மின்கம்பங்களுடன் கூடிய எல்.இ.டி. தெருமின்விளக்குகளைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், இன்று (05.03.2026) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, அடையாறு மண்டலம், வார்டு-172ல், மடுவின்கரை, மசூதி காலனி பகுதியில் மாநகராட்சியின் திருத்தம் மற்றும் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.65.29 இலட்சம் மதிப்பீட்டில் 510 மீ. நீளம் மற்றும் 2.40 மீ. அகலத்துடன் அமைக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் ரூ.5.86 இலட்சம் மதிப்பீட்டில் 15 எண்ணிக்கையில் ஆறு மீட்டர் உயரமுள்ள மின்கம்பங்களுடன் 48 வாட்ஸ் திறன் கொண்ட எல்.இ.டி. மின்விளக்குகள் என மொத்தம் ரூ.71.15 இலட்சம் மதிப்பீட்டிலான திட்டப் பணிகளைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

பின்னர், மடுவின்கரை, மசூதி காலனி பகுதி சாலை முன்பு இருந்த நிலை மற்றும் தற்போது நிலை குறித்த செயல்விளக்க வரைப்படத்தினைப் பார்வையிட்டு, 2 தெருகளிலும் நடந்து சென்று, சாலை வசதி மற்றும் மின் விளக்கு வசதி பார்வையிட்டு, பொதுமக்களிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் திரு.ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் திரு.சீ.செந்தில்குமரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**